ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# பராவரன்

- மதுரகவி தாஸன் தி கு அ வெங்கடேசன்

முண்டகோபநிஷதில் ஒரு வரி:
பித்யதே ஹ்ருதய க்ரந்திஸ்சித்யந்தே ஸர்வஸம்ஸயா: |
க்ஷீயந்தே சாஸ்ய கராணி தஸ்மின் த்ருஸ்டே பராவரே ||

இதன் எளிய அர்த்தம் என்னவென்றால் - உயர்ந்ததும் தாழ்ந்ததுமான ஒருவனை நாம் கண்டதும் நம்முடைய ஹ்ருதய முடிச்சு விலக்கப்படுகின்றன, நம்முடைய சந்தேகங்கள் விலக்கப்படுகிறது, நம்முடைய கர்மங்கள் அழிக்கப்படுகின்றன.

இதில் ஒரு பதம் - தஸ்மின் த்ருஸ்டே பராவரே. இவ்வரியினால் பராவரனான எம்பெருமானை காண்பதைப் பற்றிக் கூறப்படுகிறது.

பரன் என்றால் உயர்ந்தவன். அவரன் என்றால் தாழ்ந்தவன். உயர்ந்தவனும் தாழ்ந்தவனுமான எம்பெருமான். இதை பராபரன் என்றும் சொல்லலாம்.

பரபரன் என்றும் ஒரு பதம் உண்டு. திருவாய்மொழியில் ஆழ்வார் ’முழுதுண்ட பரபரன்" என்கிறார். பரபரன் என்றது பரர்க்கும் பரனானவன் என்றபடி. இதையே ஆழ்வார் "அமரர்கள் அதிபதி" என்றும் "மனிசர்க்குத் தேவர் போல தேவர்க்கும் தேவாவோ!" என்பர்.

இங்கு பராபரனான எம்பெருமானை நாம் காண்பது, என்றால் என்ன?

வேதங்கள் எம்பெருமானை நம்முடைய புறக்கண்களால் காண முடியாது என்று கூறுகின்றன - "ந மாம்ஸாம் அக்ஷு: அபிவீக்ஷதே தம்", "ந சக்ஷுஷா பஸ்யதி கச்சநைநம்", "ந சக்ஷுஷா பஸ்யதி கஸ்சன ஏனம் ஹ்ருதா மநீஷ மநஸாபி கீருப்தம்".

ஆழ்வாரும் எம்பெருமானை "கட்கிலீ!" என்று விளிக்கிறார். பெரிய திருவந்தாதியில் ஆழ்வார், "என்றேனும் கட்கண்ணால் காணாத அவ்வுரு" என்கிறார்.

இங்கே கட்கண் என்பது புறக்கண் என்றபடி. அப்படி கட்கண்ணால் காண முடியாத அவ்வுரு, உட்கண் என்னும் அகக்கண்ணால் காணப்படும் போது புறக்கண்களுக்கும் இலக்காகிறது.

இவ்வழியே, ஆழ்வாரும் "கமலக்கண்ணன் என் கண்ணினுள்ளான்" என்றும் "என் கண்ணனை நான் கண்டேனே" என்றும் "தேவர்கட்கெல்லாம் கருவாகிய கண்ணனைக் கண்டுகொண்டேனே" என்றும் "உன்னைக் காண்பான் அலப்பாய்" என்றும் கூறுவர். ஆசார்ய ஹ்ருதயத்தில் நாயனாரும் "கமலக்கண்ணன் என்று தொடங்கிக் கண்ணுள் நின்று இறுதி கண்டேன் என்ற பத்தும் உட்கண்ணாலேயாய்" என்று பணித்தார்.

இப்படி அகக்கண்ணால் காண்பதும் அவன் அருளாலேயாய். ஆழ்வாரும் "கட்கிலீ" என்றவுடன் "உன்னைக் காணும் ஆறு அருளாய்" என்றார். அவன் அருளால் அமலக்கண்களைப் பெற்றதனாலேயே அவனைக் காண்பது.

"ந சக்ஷுஷா பஶ்யதி" என்ற வேதமே, "ஸதா பஶ்யந்தி" என்றது. கீதையில் கண்ணன் எம்பெருமானும் "திவ்யம் ததாமி தே சக்ஷு: பஶ்ய மே யோகைஶ்வரம்" என்றான். திவ்யக்கண்களைத் தந்து ஒரு சிலருக்குத் தன்னை காட்டி அருளினான்.

ஸ்வமுயற்சியால் காண முடியாத அவனுருவை அவனருளால் சிலரே பெறுகின்றனர். இது கூடுமோ என்னில் - "கட்கிலீ" என்ற ஆழ்வாரும், "காகுத்தா கண்ணா" என்று அவன் தன்னை ராம க்ருஶ்ணாதிகளாகக் காட்டியதையும், இன்றளவும் அர்ச்சையில் தன்னைக் காட்டுவதை "திருவரங்கத்தாய்" என்றும் கூறுகிறார்.

இப்படித் தன்னைக் காட்டுமவனை வேதமானது "பராவரன்" என்றது.

பரன் என்பது பரத்வத்தைக் காட்டும். இது அவன் மேன்மையைக் கூறுகிறது.
அவரன் என்பது ஸௌலப்யத்தை காட்டும். இது அவன் எளிமையைக் கூறுகிறது.

இதில் ஏதேனும் ஒன்று மட்டும் இருந்தால் நம் காரியம் செய்யவொண்ணாது.

மேன்மை மட்டுமே உடைய ஒருவனை நம்மால் அணுக முடியாது.
எளிமை மட்டுமே உடைய ஒருவனால் நமக்கு ஒன்றும் செய்ய முடியாது.

இவை இரண்டும் ஒரே வ்யக்தியில் வேண்டும் என்றாலும், அது மாறி மாறி ஏற்படுவதும் நமக்குப் பயனன்று. அரசனாக இருந்த ஒருவன் ஆண்டியாக ஆனால், இரண்டு குணமும் அவன் ஒருவனிடத்திலேயே என்றாலும் அதனால் ப்ரயோஜனமில்லை. ஒரு தேசத்தில் அரசனாக இருக்கும் ஒருவனால் மற்றொரு தேசத்தில் கார்யம் செய்ய இயலாது.

ஸர்வ தேசங்களிலும், ஸர்வ காலங்களிலும், ஸர்வ அவஸ்தைகளிலும் இரண்டும் சேர்ந்து இருக்கும் ஒருவனிடத்திலேயே நம் கார்யம் கைகூடும். அது எம்பெருமான் ஒருவனிடத்திலேயே காண முடியும்.

இவை இரண்டு குணங்களும் அவனிடம் ஒருங்கே சேரப்பெற்றதை ஆழ்வாரும் "பத்துடை அடியவர்க்கெளியவன், பிறர்களுக்கரிய வித்தகன்' என்கிறார். அப்பாசுரத்திலேயே "நம் அரும்பெறல் அடிகள்" என்றவிடத்து, "அரும்பெறல்" என்பதால் அவன் மேன்மையையும் "நம்" என்பதால் அவன் நீர்மையையும் குறிக்கிறார். இவ்வெளிமையை யோசித்தன்றோ ஆழ்வார் ஆறு மாதம் மோஹித்துக் கிடந்தது.

பிறர்களுக்கு அரியன் என்ற ஆழ்வார் உடனே "எளிவரும் இயல்வினன்" என்கிறார். இத்தால் எளிமை அவன் ஸ்வபாவமே என்று காட்டுகிறார். இது வந்தேறிய குணமன்று. எனவே இதுவும், அவனுடைய "வீடு தரும் இறையோன்" என்ற மேன்மையும் எங்கும் எப்போதும் எந்நிலையிலும் ப்ரகாஸிக்கும்.

அடுத்தது ஆழ்வார் "யாரும் ஓர் நிலமையன் என அறிவரிய எம்பெருமான்" என்றும் "யாரும் ஓர் நிலமையன் என அறிவெளிய எம்பெருமான்" என்றும் கூறுகிறார். முதலில் சொன்ன யாரும் என்பது ஞானிகளையும், தேவர்களையும், ப்ரஹ்ம ருத்ராதிகளையும் குறிக்கும். அவர்களுக்கும் அரிய மேன்மை படைத்த எம்பெருமான், அடுத்ததான யாரும் என்பதில் சொல்லப்பட்ட ஒன்றும் அறியா எளியர்களான குஹ ஸுக்ரீவ, குசேல, கூனி, கோபிகா, மாலாகாரர்களுக்கு எளியனாகிறான்.

இங்கு சொல்லப்பட்ட எளிமையானது பாபங்களைப் போக்கி, நன்மைகளைத் தந்து, மோக்ஷத்தைக் கொடுத்து, தன்னையே தருமது மட்டுமன்று. தன்னடியார்க்கு எதுவும் செய்வானய் இருப்பதைக் கூறுகிறது என்பது ஈடு. நம் விதி வழி நடப்பவன் என்பது ஆழ்வார் திருவாக்கு. இதனாலேயே அவன் தூத ஸாரத்ய வேஶங்களைத் தரித்தது. பெருமாளும் "இமௌ ஸ்ம முனிஶார்தூல கிங்கரௌ ஸமுபஸ்திதௌ" என்றார்.

இப்படி மேன்மையும் எளிமையும் ஒருங்கே கலந்த பராவரனான எம்பெருமான், இதை தன் ஸகல நிலைகளுமான பர, வ்யூஹ, அந்தர்யாமி. விபவ, அர்ச்சைகளிலும் காட்டுகிறான்.

இதில் விபவங்களான அவதாரங்களில், மற்றைய அவதாரங்களைக் காட்டிலும் பூரணமாகக் சௌலப்ய பரத்வங்களை சேர்த்துக் காட்டுவது க்ருஷ்ணாவதாரத்திலேயே.

அதில் உதாரணமாக, ஒரு சில இடங்களைப் பார்ப்போம்.

- தேவகிக்குப் பிறந்தது - எளிமை
- சதுர்புஜனாக திவ்யாயுதங்களோடு பிறந்தது - மேன்மை

- பூதனையிடம் பால் குடித்தது - எளிமை
- அவள் உயிரை அவ்வழியே மாய்த்தது - மேன்மை

- ஆநிரைகளை மேய்த்தது - எளிமை
- அவைகளை குன்றெடுத்துக் காத்தது - மேன்மை

- தொட்டிலில் கிடந்தது - எளிமை
- அதில் மறைந்திருந்த அசுரனை மாய்த்தது - மேன்மை

- மண்ணை உண்டது - எளிமை
- உண்ட வாயில் உலகனைத்தும் காட்டியது - மேன்மை

- பசுக்களையும் சிறுவர்களையும் ப்ரஹ்மா கடத்த விட்டது - எளிமை
- அவை அனைத்தும் தானே ஆனது - மேன்மை

- கோபிகைகளோடே விளையாடியது - எளிமை
- ஒவ்வொரு கோபிகைக்கும் ஒரு க்ருஷ்ணனானது - மேன்மை

- ஆய்ச்சியால் கட்டுண்டது - எளிமை
- யமளார்ஜுனர்களை சாபத்திலிருந்தும் விடுவித்தது - மேன்மை

- சிசுபாலனைக் கொன்றது - எளிமை
- அவனுக்கு பரகதியைத் தந்தது - மேன்மை

- த்வாரகையில் இருந்தது - எளிமை
- அங்கிருந்தும் த்ரௌபதிக்குப் புடவை சுரந்தது - மேன்மை

- சேனைகளைத் துர்யோதனனுக்குத் தந்தது - எளிமை
- தன்னையே அர்ஜுனனுக்குத் தந்தது - மேன்மை

- ஸாரதியாய் ஆனது - எளிமை
- கீதையை உலகுக்கெல்லாம் உரைத்தது - மேன்மை

இப்படி விபவத்தில் செய்ததை, அர்ச்சையிலும் செய்கிறான். அர்ச்சையில் எளிமையைக் காண்பது சுலபம். அதில் மேன்மையைக் காண்பது எல்லோருக்கும் அமையாது.

ஸ்ரீரங்கநாதனை பரவாஸுதேவனாகக் காணாமல் ஸ்ரீரங்கநாதனே பரவாஸுதேவன் என்பதே ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம் என்பர் ஸ்வாமி நம்பிள்ளை.

இதையே "பின்னானார் வணங்கும் சோதி" என்றார் திருமங்கை மன்னன்.

அப்படி அர்ச்சையில் இரண்டையும் கண்டவர் திருப்பாணாழ்வார்.

"அண்டர்கோன் அணியரங்கன் என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே".

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்